இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 11.09.2026

# நடிக்காதே நயவஞ்சகா...!

விஜய்யின் அசிங்கமான, கீழ்த்தரமான, நாற்றமடிக்கும் அரசியல் தமிழ் நாட்டையே மிகமிக மோசமான நிலைமைக்குத் தள்ளி வருகிறது. முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு நாட்டு மக்களுக்கு ஒரு நன்மையும் செய்யத் துப்பு இல்லாத விஜய், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - திராவிட நாயகன் - தியாகத்தின் அடையாளமான மு.க.ஸ்டாலினை அசிங்கப்படுத்துவதுதான் தனது ஒரே வேலை எனச் செய்து வருகிறார்.

மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்ததை கொச்சைப்படுத்தி விஜய் காட்டிய சைகையும், அது தொடர்பாக அமைச்சர் நிர்மல்குமாரின் பொய் மூட்டைகளும் சட்டமன்றத்தில் அரங்கேறி சட்டமன்றத்தையே அசிங்கம் ஆக்கிவிட்டது.

**ஓராண்டு காலம் அல்ல, ஒரு நாள் கூட ஜெயிலுக்குள் தாங்க மாட்டார் விஜய். சினிமாவில் சிறையில் இருக்கலாம். அடிவாங்குவதைப் போல நடிக்கலாம். ஆனால் உண்மையான சிறை, அதுவும் மிசா சிறை என்பது அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத் தான் அந்த வேதனை தெரியும். அதைக் கொச்சைப்படுத்தும் போது நாம் அடையும் வேதனை அளவுக்கு அதிகமானது.**

**“முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் மகனாகிய மு.க.ஸ்டாலின் (வயது 23) சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு மாநிலத்தில் சட்ட விரோதத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறார். இவர் கட்சியால் நடத்தப்படும் பல்வேறு பொதுக்கூட்டங்களில் பங்கேற்று, பிரிவினைவாத மற்றும் அவசரநிலைக்கு எதிரான கட்சியின் கொள்கைகளைப் பரப்பி வருகிறார். மாநில அரசின் சொந்தத் தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் மத்திய அரசே காரணம் என்று கூறி, மத்திய அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு வருகிறார். மாநிலச் சட்டமன்றத்தின் பதவிக்காலம் நீட்டிக்கப்படாவிட்டால் தமிழ்நாட்டில் புரட்சி வெடிக்கும் என்று மிரட்டும் அளவிற்கு இவர் சென்றுள்ளார். இவர் தேச விரோத, அவசரநிலை எதிர்ப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிரான வலுவான கருத்துக்களைக் கொண்டவர். இவர் தொடர்ந்து சுதந்திரமாக நடமாடுவது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பொது அமைதியைப் பராமரிப்பதற்கும் கேடு விளைவிப்பதாக அமையும். எனவே, ‘உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்டம், 1971’-இன் பிரிவு 3(1)(a)(ii) மற்றும் பிரிவு 3(1)(e) ஆகியவற்றின் கீழ் இவரைக் காவலில் வைப்பது அவசியமாகும்” என்று 1-3-1976 அன்று கூடுதல் காவல் துறைத் தலைவர் மற்றும் காவல் ஆணையர் உத்தரவிட்டு கைது செய்யப்பட்டார் தலைவர் மு.க.ஸ்டாலின். நிர்மல்குமாருக்கு தமிழ் வாசிக்கத் தெரியுமானால் இதைப் படிக்க வேண்டும்.**

மிசாவில் கைதான போது - அன்றைய இரவு எப்படி இருந்தது என்பதை சிட்டிபாபு தனது சிறை டைரியில் எழுதி இருப்பார்...

**“அன்றிரவு ஒரு மணி இருக்கும். என் தம்பி ஸ்டாலின் சிறைக்கு அழைத்து வரப்பட்டான். பாவம் புது திருமணப் பிள்ளை. முழு வாழ்வை அவன் பெறுவதற்கு முன்னால் அவனுக்கு முள்வேலி. சிறை உணவை தம்பி (ஸ்டாலின்) சுவைத்தான். பசியோ என்றுகூட எண்ணினேன். இல்லை பழக்கப்படுத்திக் கொள்ளவே என்றான். இதுதானே இனிமேல் உணவு நமக்கு என்று என்னைக் கேட்டான்.**

**முதலில் நான் தாக்கப்பட்டேன். பின்னர் தம்பி தாக்கப்பட்டான். தமிழகத்தின் முதல் அமைச்சரின் மகன் என்று நேற்றுவரை அறிந்த அந்த ஆசிரியன் (சுருளிராஜன்) தன் கால் பூட்ஸால் அவன் அழகிய முகத்தைச் சுவை பார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள்பட்டையில்! காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் ஸ்டாலின் கன்னத்தில் அறைந்தான். கொலை வெறியர்கள் தடிகளால் தாக்கினார்கள். கண்டேன் காட்சியை! இவர்கள் இவனை அடித்தே கொன்று விடுவார்கள் என்ற உணர்வு ஏற்பட்டது! மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர்! உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள்! என்ன செய்வது;**

**எனக்கென்று ஓர் துணிவு! திடீரென்று குறுக்கே பாய்ந்தேன்! தம்பியை தள்ளிக் கொண்டே தடிகள் கழுத்தில்! அவைகள் அடிகள் அல்ல! உலைக்களத்தில் பழுத்துக் காய்ச்சிய இரும்பை தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாற்றிவிடும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது! கழுத்தில் அத்தனையும் தாங்கிக் கொண்டேன். அன்புத்தம்பி ஸ்டாலின் அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது. வீராசாமியை தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர். நீலம் மூச்சுத் திணற வி.எஸ்.ஜி.யை தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார்! தம்பி ஸ்டாலினோ தான் பட்ட அடி மறந்து, தன் உடன்பிறப்புகளை உள்ளே அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க தன் தோள் துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களைத் தாங்கி படுக்க வைத்த காட்சி கண்டேன். என்னை ஒருவன் வாடா தம்பி, வா என்று வாயில் ஓர் குத்துவிட்டு உள்ளே தள்ளினான். சர்வாதிகாரத்தின் நச்சு நாக்கு கொடிய காற்றில் நெடிய மரம் சாய்ந்து விழுவது போல் அறையில் நான் வீழ்ந்தேன்! இல்லை தள்ளப்பட்டேன். அறை முழுவதும் இருள் அல்லவா? நினைவு வேறு எனக்குப் பாதியாகத்தான் இருக்கிறது! பூட்டு பூட்டப்பட்டது! .....” இதுதான் சிட்டிபாபுவின் சிறை டைரி ஆகும்.**

சிறைச்சாலை சித்திரவதைகள் தொடர்பாக நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் தலைமையில் ஆணையம் அமைத்தார் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அந்த ஆணையத்தில் வைக்கப்பட்ட மிக முக்கியமான ஆவணம் இந்த டைரி தான். தியாக மறவன் சிட்டிபாபு 5.1.1977 அன்று உயிர் நீத்தார் என்பதும் தியாக வரலாற்றின் கண்ணீர் பக்கம் ஆகும்.

**வருமான வரி ரெய்டில் சிக்கியபோது முகத்தை மூடிக்கொண்டு ஓடிப்போன விஜய் - தனது படம் ரிலீஸுக்கு பிரச்சினை என்றதும் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பார்க்க கொடநாடு பங்களாவில் காவலாளிக்குப் பக்கத்தில் காத்திருந்த விஜய் - கையைக் கட்டி வீடியோ போட்டு கதறிய விஜய் - கரூரில் 41 பேரை பலியும் பழியும் வாங்கிவிட்டு ஓடிப்போன விஜய் - சினிமாவில் கூட இப்படி ஒரு காட்சி வைத்தால் நடிக்கக் கூட முடியாது.**

ஆனால் ஓராண்டு காலம் சிறைச்சாலை சித்திரவதையை அனுபவித்து வாழ்ந்தவர் தியாகத்தின் திருவுருவம் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின். அவரிடம் விஜய், பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும். இதுதொடர்பாக சட்டசபையில் தான் பேசியது அனைத்தையும் திரும்பப் பெற வேண்டும். இவை அனைத்தும் சட்டசபைக் குறிப்புகளில் இருந்து நீக்கப்பட வேண்டும். இது எதையும் செய்யாமல், ‘எனது உடல்மொழி தவறாக இருந்தால்... புண்பட்டு இருந்தால்...’ என்றெல்லாம் நடிக்கக் கூடாது. நடிக்காதே நயவஞ்சகா!

••



நடைபெற உள்ள மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (09.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஆ.இராசா, எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின்,எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே.இ.பிரகாஷ், எம்.பி., மடத்துக்குளம் ஜெயராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., முன்னாள் சபாநாயகர் மு.அப்பாவு, மாநில மாணவர் அணிச் செயலாளர் வீரமணி ஆகியோர் உடனிருந்தனர்.

## கழிவுநீர்க் குட்டையில் மாணவன் சடலமாக மீட்பு:

# த.வெ.க. அரசில் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றனவோ!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



சென்னை, செப். 11 –

மதுரையில் கழிவுநீர் குட்டையில் மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளது தொடர்பாக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது சமூக வலைதளப் பதிவில் த.வெ.க. அரசில் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றனவோ! என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவு வருமாறு:

மதுரை ஆனையூர் அருகே காணாமல் போன 11ஆம் வகுப்பு மாணவன் கழிவுநீர் குட்டையில் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், உடற்கூறு ஆய்வில் அவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் கிடைத்துள்ளதாக தெரிகிறது.

சட்டம் – ஒழுங்கு சீர்கேட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் த.வெ.க. அரசின் அலட்சியப் போக்கால் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றன என்ற கேள்வி எழுகிறது.

மாணவனின் மரணம் தொடர்பாக சமரசமற்ற விசாரணை நடத்தி, குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் இன்று மழை!

*சென்னை, செப் 11 - மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று (11.09.2026) ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை, திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*


*ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

# கபட வேட விஜய்யின் வெத்துவேட்டு!

## அமைச்சர் நிர்மல்குமாரின் (டவுசர் பாண்டி) கூற்றை நிர்மூலமாக்கும் ஆதாரம் இதோ!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.3.76 அன்று ‘மிசா’ சட்டத்தில்தான் கைது செய்யப்பட்டார் என்பதற்கான ஆதாரமாக அன்றைய சென்னை போலீஸ் கமிஷனரின் உத்தரவு நகல்:

**இப்போதாவது ‘டவுசர் பாண்டி’ மரமண்டைக்குப் புரியுமா?**



ORDER No.39/76.

GROUNDS FOR DETENTION

M.K.Stalin (23) s/o M. Karunanidhi, 7/4, 4th Street, South Gopalapuram, Madras is an activist in the Dravida Munnetra Kazhagam. As the son of M. Karunanaidhi former Chief Minister, he has been taking law into his own hands and engaging in lawless acts in the State.

2. He participates in the several public meetings convened by the party and propagates the separatist, anti-emergency policies of the party. He has been inciting audiences against the Union Government by holding it responsible for the State Government's own lapses and failures. ~~xx~~ He went to the extent of threatening a revolution in Tamil Nadu if the life of the State Assembly was not extended.

3. He has strong anti-national and anti-emergency and anti-integration views. His continuance at large will be prejudicial to national integration and maintenance of public order. It is therefore necessary that he be detained under section 3(1)(a) (ii) read with section 3(1)(e) of the Maintenance of Internal Security Act, 1971.

Dated: 1-3-76.

Addl. Inspr. Genl. and Commissioner of Police.

Seal:

## சமூக நீதியைச் சீர்குலைத்து

# உயர்கல்வியை வணிக மயமாக்கும் - த.வெ.க. அரசுக்கு கண்டனம்!

## முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் அறிக்கை!

**சென்னை, செப். 10 – சமூகநீதியைச் சீர்குலைத்து உயர் கல்வியை வணிகமயமாக்க த.வெ.க. அரசு அவசர அவசரமாக சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளில் தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றியது ஏன்? என்று கேட்டு முன்னாள் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் த.வெ.க. அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

ஆட்டுக்குத் தாடியை அளந்து வைத்திருப்பது போல் – முதலமைச்சர் விஜய்க்கு “எம்.எல்.ஏ.க்களை மக்கள் கொடுத்திருக்கும் இந்த நேரத்தில்கூட, த.வெ.க. அரசின் ”அடாவடி மட்டுமல்ல, ஆணவ நடவடிக்கைகள் எண்ணற்ற தமிழ்நாட்டு இளைஞர்களின் உயர்கல்விக் கனவைச் சிதைத்து விடும் என்பதால், நேற்று நிறைவேற்றப்பட்டிருக்கும் ”தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா – 2026க்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுள்ள ”தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்ட மசோதாவில், “ப்ரைவேட் யுனிவர்சிட்டி அமைக்க சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 100 ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும்; சென்னை தவிர மற்ற பகுதிகளில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க 50 ஏக்கர் நிலம் வேண்டும் எனவும், ”Permanent Endowment Fund ஆக 50 கோடி ரூபாய் டெபாசிட் செய்ய வேண்டும் எனவும் இருந்த தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டம்,



2019–ஐ அவசர அவசரமாக த.வெ.க. அரசு கூட்டத் தொடரின் கடைசி நாளில் திருத்தி நிறைவேற்றியிருக்கிறது.

உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் 24.8.2026 அன்றே நடைபெற்று முடிந்து விட்டது. 15 நாட்கள் கழித்து இப்படியொரு சட்டத் திருத்தத்தைக் கூட்டத் தொடரின் கடைசி நாளில் இவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்திருப்பது ஏன்?

இந்தத் திருத்தம் மூலம் சென்னை மாநகர எல்லைக்குள் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க இருந்த 100 ஏக்கரை 12 ஏக்கர் என அதிரடியாகக் குறைத்திருப்பது யாருக்காக?

இதுதவிர, மற்ற முனிசிபல் லிமிட் மற்றும் கிராமப்புறங்களில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க 50 ஏக்கர் நிலம் தேவை என்றிருந்ததை, முனிசிபல் லிமிட்டிற்குள் 18 ஏக்கராகவும், கிராமப்புறங்களில் 25 ஏக்கராகவும் குறைத்திருப்பதன் உள்நோக்கம் என்ன?

இப்படி தனியார் பல்கலைக்கழகம் அமைக்கச் செலுத்த வேண்டிய Permanent Endowment Fund 50 கோடி ரூபாயை வெறும் 25 கோடி ரூபாயாகக் குறைக்கப் பட்டிருக்கிறது.

அது மட்டுமின்றி – இப்படி குறைக்கப்பட்ட 25 கோடி ரூபாய் சலுகை, ஏற்கனவே தனியார் பல்கலைக்கழகமாக அனுமதி அளிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நீட்டிக்கப்படும் என ”பின்தேதியிட்ட சலுகை ஏன் வழங்கப்படுகிறது?

தனியார் பல்கலைக்கழகம் ஒருவேளை திவாலானால் – அங்கு பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் பாதுகாப்பினை உறுதி செய்யத்தான் இந்த Permanent Endowment Fund உருவாக்கப்பட்டுள்ளது. அதைச் சரிபாதியாகக் குறைத்து – ஏன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பிற்குத் த.வெ.க. அரசு ஆட்சிக்கு வந்த 4 மாதங்களுக்குள் உலை வைக்க வேண்டும்?

”கஜானா காலி எனக் கூறி மின் கட்டணம், சொத்துவரி என மக்கள் தலையில் ”வரி வசூல் என்ற பாறையைத் தூக்கி வைக்க முயற்சிக்கும் த.வெ.க. அரசு, ஏற்கனவே மாணவர்களின் பெற்றோரிடம் அதீத கட்டண வசூலில் ஈடுபடும் தனியார் பல்கலைக்கழகங்களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்த ஏன் திட்டமிட்டுச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறது?

நிதிப் பற்றாக்குறையில் உள்ள அரசுப் பல்கலைக்கழகங்களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்த முடியாமல், தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கத்தான் இந்த உயர்கல்வி மானியக் கோரிக்கையில் பல்கலைக்கழகங்களுக்கு 100 கோடி ரூபாய் நிதி குறைக்கப்பட்டதா?

இப்படித் தளர்வு அளிக்க யார் யார் கோரிக்கை வைத்தார்கள் என்ற விவரமும் இல்லை. அதை அரசு வெளியிடவும் இல்லை!

புதிய சட்டத் திருத்தம் மூலம் புதிய பொறியியல் கல்லூரிகளும், கலைக் கல்லூரிகளும் ”தனியார் பல்கலைக்கழக அந்தஸ்து கேட்டுப் பெற்று, புற்றீசல் போல் எங்கு பார்த்தாலும் தனியார் பல்கலைக்கழகம் என்ற சூழல் உருவானால், பேறறிஞர் அண்ணா பெயரில் உள்ள பல்கலைக் கழகம் உள்ளிட்ட அரசு கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் என்ன ஆவது?

ஏற்கனவே எங்கள் ஆட்சியில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கச் சலுகை அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை வந்து, அதை நிறைவேற்ற முனைந்தபோது கடும் எதிர்ப்பு வந்த காரணத்தால், மக்களின் கருத்திற்கு மதிப்பளித்து அந்த முயற்சியை எங்கள் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் கைவிட உத்தரவிட்டார்.

ஆனால், இன்றைக்கோ புதிதாகப் பொறுப்பேற்ற த.வெ.க. அரசு, உயர்கல்வியில் ஏழை, எளிய மாணவர்கள் கலந்தாய்வு மூலம் சேரும் வாய்ப்பைத் தட்டிப் பறித்து – சமூகநீதிக் கொள்கைக்கு ஏன் வேட்டு வைக்கிறது?

ஆகவே, அரசுப் பல்கலைக்கழகங்களை வலுப்படுத்த வேண்டும் எனவும், இப்படிப் புதிய ”தளர்வுக் கொள்கை அறிவித்துத் தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவித்து, உயர்கல்வியை வணிகமயமாக்கும் தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த மசோதா, 2026–ஐ த.வெ.க. அரசு நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.